DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No.163/2019**

Deposition of Witness : PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | முனீஸ்வரன் | Father's Name | : | ராமதாஸ் |
| Village | : | வடபுதுப்பட்டி | Taluk | : | பெரியகுளம் |
| Caste | : | | Calling | : | கொத்தனார் |
| Religion | : | | Age | : | 59 |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 06-05-2024.

---

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்தானது யாருடைய கவனக்குறைவால், எவ்வாறு நடைபெற்றது என்பது பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்தில் எனது மகனுக்குத் தான் காயங்கள் ஏற்பட்டது. எனது மகன் தற்பொழுது சாட்சியம் அளிக்க முடியாத நிலையில் இருந்துவருகிறார் என்பதை நிரூபிப்பதற்கு மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தவறு. எனது மகன் நல்லநிலையில் இருந்துவருகிறார் என்றும், அவர் நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் அளித்தால் வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதாலும், அதிக இழப்பீடு பெறவேண்டும் என்பதாலும் நான் வந்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் தவறு. விபத்து சமயத்தில் எனது மகன் சிவில் இன்ஜினியராக பணியாற்றி வீரபாண்டியில் கட்டப்பட்டு வந்த புதிய வீட்டிற்கு சூப்ரவைசராக பணியாற்றிவந்தார். அவ்வாறு எனது மகன் சூப்ரவைசராக வேலைபார்த்து வந்ததற்கு ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை. விபத்து சமயத்தில் எனது மகன் மாதம் ரூபாய் முப்பதாயிரம் சம்பாதித்து வந்தார் என்பதை நிரூபிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. விபத்திற்கு பின்னிட்டு எனது மகன் தேனி அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில் அதற்கான விபத்து பதிவேடு நகலை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. விபத்தில் எனது மகனுக்கு தலையில் அடிபட்டது. விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணிந்திருந்தார். எனது மகன் தலைக்கவசம் அணியவில்லை என்றும், அவ்வாறு தலைக்கவசம் அணிந்திருந்தால் அவருக்கு தலையில் அடிபட்டிருக்காது என்றும் சொன்னால் தவறு. விபத்து சமயத்தில் எனது மகன் அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும்

வாகனத்தை ஓட்டி திடீரென்று வலதுபக்கம் திருப்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் தவறு. விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் காரை மெதுவாகவும், கவனமாகவும் தான் ஓட்டிவந்தார் என்றால் தவறு. விபத்தினால் எனது மகனுக்கு நிரந்தர ஊனமோ அல்லது வருமானஇழப்போ எதுவும் ஏற்படவில்லை என்றால் தவறு. விபத்தில் எனது மகனுக்கு சாதாரண காயங்கள் தான் ஏற்பட்டது என்றால் தவறு. எனது மகன் சராசரி நபர் செய்யும் அனைத்து வேலைகளையும் செய்துவருகிறார் என்றால் தவறு. விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கும், நான் தாக்கல் செய்துள்ள மருத்துவஆவணங்களுக்கும் சம்பந்தமே இல்லை என்று சொன்னால் தவறு. அப்பல்லோ மருத்துவமனையில் எனது மகனுக்கு என்ன மாதிரியான சிகிச்சைகள் எடுத்தோம் என்பதை நிரூபிப்பதற்கு மருத்துவ விடுவிப்பு குறிப்பு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் தவறு. மருத்துவ ரசீதுகள் அனைத்தும் இன்வாய்களாக உள்ளது என்றும், அவைகள் தொகை செலுத்துவதற்கு கொடுக்கப்பட்டவைகள் அல்ல என்றும், அதன் அடிப்படையில் மருத்துவசெலவுகள் கோரஇயலாது என்றும் சொன்னால் தவறு. அப்பல்லோ மருத்துவமனையில் வழங்கிய Final bill ஐ வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. Consulting fees என்று மருத்துவ ரசீதுகளில் குறிப்பிட்டுள்ளநிலையில் அதற்கான சிகிச்சை எடுத்ததற்கு மருந்து பரிந்துரை சீட்டுகள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தவறு. நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ ரசீதுகளில் உள்ள கிரெடிட் பில்கள் உள்ளது என்றும், அந்த கிரெடிட் பில்களில் உள்ள தொகைகள் எனது மகனுக்கு கிடைக்கதக்கதல்ல என்றும் சொன்னால் தவறு. அப்பல்லோ மருத்துவமனையில் எனது மகனுக்கு சிகிச்சை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் தவறு. மருத்துவரசீதுகளின் உண்மைதன்மையை நிரூபிப்பதற்கு மருத்துவமனை அலுவலர்களையோ அல்லது மருத்துவரையோ விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் விசாரிப்பேன். விபத்தானது எனது மகனின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் தவறு.

மறுவிசாரணை – இல்லை.

*Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.*

V SURESH
Digitally signed by V SURESH
Date: 2024.05.06 16:04:49 +0530

Chief Judicial Magistrate,
Theni.